சுருக்கம்

பொதுப்பணிகள் - வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணிநியமனம் -முன்னுரிமை பெற்றோர் மற்றும் முன்னுரிமையற்றோருக்கு இடையேயான 1 : 4 என்ற விகிதாச்சாரத்தை மாற்றியமைக்கப்பட்ட 200 புள்ளி இனச்சுழற்சி முறையுடன் கடைபிடித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை

அரசாணை (நிலை) எண்.174 நாள்: 11.09.2008

ஆவணி 26, திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.398, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 13.9.1990.
2. அரசாணை (நிலை) எண்.241, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 29.10.2007.
3. அரசாணை (நிலை) எண்.20, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 12.2.2008.
4. அரசாணை (நிலை) எண்.101, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 30.5.2008.

ஆணை :

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், முன்னுரிமை பெற்றோர் மற்றும் முன்னுரிமையற்றோருக்கு இடையே வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணிநியமனங்கள் மேற்கொள்ளும்போது 1 : 4 விகிதாச்சாரம் கடைப்பிடிக்கவேண்டும் என ஆணையிடப்பட்டது. மேலும் பணிநியமன அதிகாரி, காலிப்பணியிடங்களை நிரப்பிடும்போது மேற்கூறப்பட்ட 1 : 4 என்ற விகிதாச்சாரத்தோடு இனச்சுழற்சி விதியினையும் மகளிர் மற்றும் ஊனமுற்றோருக்கான இடஒதுக்கீடு விதியினையும் உடனிகழ்வாக (Simultaneous Application) பின்பற்ற வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 200 புள்ளி இனச்சுழற்சி முறை நிர்ணயம் செய்யப்பட்டு, ஏனைய இனத்தவர்களுக்கிடையே பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கும் தலா 3.5 சதவிகிதம் இடஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. அதனடிப்படையில், வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணிநியமனங்கள் மேற்கொள்ளும்போது, முன்னுரிமைபெற்றோர் மற்றும் முன்னுரிமையற்றோருக்கான 1 : 4 என்ற விகிதாசாரத்தோடு உடனிகழ்வாக (Simultaneous Application) இனச் சுழற்சி முறையையும் பின்பற்ற வேண்டும் என்றும், மேற்சொன்ன 1 : 4 என்ற விகிதாச்சாரத்தைப் பொதுப்போட்டி, ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் கிறிஸ்தவர்கள், பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள், மற்றும் பழங்குடியினர் ஆகிய இனங்களில் ஒவ்வொரு இனத்திலும் முதலிடம் முன்னுரிமை பெற்றோருக்கும் அதே இனத்தைச் சார்ந்த அடுத்துவரும் நான்கு இடங்கள் முன்னுரிமையற்றோருக்கும் ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும் என மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

த.பி.பா.

3. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கும் தலா 3.5 சதவிகிதம் இடஒதுக்கீட்டின்படி உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறும் வகையில் மாற்றியமைக்கப்பட்ட 200 புள்ளிகள் கொண்ட இனசுழற்சி (Modified Roster) முறை நிர்ணயம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

4. இதனடிப்படையில் முன்னுரிமை பெற்றோருக்கும், முன்னுரிமையற்றோருக்கும் இடையேயான 1 : 4 என்ற விகிதாச்சாரம் இனவாரியாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய முறையை இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் சொல்லப்பட்டவாறு மாற்றியமைத்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குத்சியா காந்தி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:—
அனைத்துத் துறைச் செயலாளர்கள், தலைமைச்செயலகம், சென்னை—9.
அனைத்துத் தலைமைச்செயலக (அ.ந.மு) துறைகள், சென்னை—9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை—104.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட நீதிபதிகள்.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை—6.
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, கிண்டி, சென்னை—32.

நகல் :—
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம்), சென்னை—9.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அனைத்து பிரிவுகள்.

**பிற்சேர்க்கை**

| | | |
|---|---|---|
| 1. | பொதுப்போட்டி | முன்னுரிமை பெற்றவர் |
| 2. | ஆதிதிராவிடர் | முன்னுரிமை பெற்றவர் |
| 3. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமை பெற்றவர் |
| 4. | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமை பெற்றவர் |
| 5. | பொதுப்போட்டி | முன்னுரிமையற்றவர் |
| 6. | ஆதிதிராவிடர் | முன்னுரிமையற்றவர் |
| 7. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமையற்றவர் |
| 8. | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர் |
| 9 | பொதுப்போட்டி | முன்னுரிமையற்றவர் |
| 10. | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர் |
| 11. | பொதுப்போட்டி | முன்னுரிமையற்றவர் |
| 12. | ஆதிதிராவிடர் | முன்னுரிமையற்றவர் |
| 13. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமையற்றவர் |
| 14. | பிற்படுத்தப்பட்டோர் கிறிஸ்தவர்கள் | முன்னுரிமை பெற்றவர் |
| 15. | பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள் | முன்னுரிமை பெற்றவர் |
| 16. | ஆதிதிராவிடர் | முன்னுரிமையற்றவர் |
| 17. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமையற்றவர் |
| 18. | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர் |
| 19. | பொதுப்போட்டி | முன்னுரிமையற்றவர் |
| 20. | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர் |
| 21. | பொதுப்போட்டி | முன்னுரிமை பெற்றவர் |
| 22. | ஆதிதிராவிடர் | முன்னுரிமையற்றவர் |
| 23. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமையற்றவர் |
| 24. | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமை பெற்றவர் |
| 25. | பொதுப்போட்டி | முன்னுரிமையற்றவர் |
| 26. | ஆதிதிராவிடர் | முன்னுரிமை பெற்றவர் |
| 27. | பொதுப்போட்டி | முன்னுரிமையற்றவர் |
| 28. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமை பெற்றவர் |
| 29. | பொதுப்போட்டி | முன்னுரிமையற்றவர் |
| 30. | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர் |
| xx | xxxxxxxxxxxx | xxxxxxxxxx |
| 50. | பழங்குடியினர் | முன்னுரிமை பெற்றவர் |
| xx | xxxxxxxxxxxxx | xxxxxxxxxxx |